# சட்டக்கலை அறிமுகம்–04

الفقه في حياة النبي صلى الله عليه وسلم

## இஸ்லாமிய சட்டக்கலை கடந்து வந்த பாதை (பகுதி - 4)

இஸ்லாமிய சட்டக்கலையின் வரலாற்றை விரிவாக அலசுவது இவ்விடத்தில் நோக்கமன்று. இத்துறையை விரிவாக ஆய்வு செய்வதற்கு தனியான தொரு துறை இருக்கின்றது. இத்துறை இஸ்லாமியக் கலைகளில் "சட்டக்கலை வரலாறு" என்றழைக்கப்படுகின்றது. இத்துறையில் தனியான நூல்கள் நிறைய எழுதப்பட்டுள்ளன.

ஆனால், சட்டநூற்களை படிப்பவர்களிடம் இத்துறையின் வரலாறு சார்ந்த ஒரு சிறிய கண்ணோட்டம் கட்டாயம் இருந்திட வேண்டும். ஏனைய சமூகங்களின் சட்டத்துறைகளிலிருந்து எமது - இஸ்லாமிய - சட்டக்கலை எவ்வாறு தனித்துவிளங்குகின்றது என்பதையும் வாசிப்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதனால் தான் இத்துறைபற்றி இங்கு சுருக்கமாக எழுதப்படுகின்றது.

இஸ்லாமிய சட்டத்துறை பல கட்டங்களைத் தாண்டிவந்தாலும், அவை ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகவே காணப்படுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு கட்டத்திலும் வாழ்ந்த அறிஞர்கள், தம்மைவிட முந்திய கட்டங்களில் வாழ்ந்த அறிஞர்களின் கருத்துத் தாக்கத்திற்குறப்பட்டும், அவர்களின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டும் உள்ளனர். இதன் காரணமாக ஒவ்வரு கட்டதையும் காலத்தின் அடிப்படையில் பிரித்து நோக்குவது மிகச் சிரமமான விடயமாகும்.

ஆனால், சட்டக்கலையின் முதலாவது காலப்பிரிவான நபி (ஸல்) அவர்கள் உயிர்வாழ்ந்த காலப்பகுதி அதற்கும் பிற்பட்ட காலங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. இந்த முதலாவது காலப்பகுதி நபி (ஸல்) அவர்களுடைய வபாத்துடன் முற்றுப்பெறுகின்றது. அக்காலகட்டங்களை 5 பகுதிகளாகப் பிரித்து நோக்கலாம்.

நபி (ஸல்) அவர்களுடைய காலம்.

நபி (ஸல்) அவர்கள் தமது மக்கா வாழ்க்கையிலும், மதீனா வாழ்க்கையிலும் முற்றுமுழுதாக "வஹீ" எனும் வேதவெளிப்பாட்டின் மீது தங்கியிருந்தனர்.

சில சந்தர்ப்பங்களில் நபி (ஸல்) இஜ்திஹ்தின் அடிப்படையில் சட்டங்கலளைக் கூறுவர். அல்லது நபி (ஸல்) அவர்களுக்கு முன்னர், அல்லது அவர்களுக்கு மறைவில் ஸஹாபாக்கள் இஜ்திஹாதின் அடிப்படையில் சில முடிவுகளை எடுப்பர். இவ்வாறு இஜ்திஹ்தின் வழிநின்று ஸஹாபாக்கள் எடுத்துக்கொண்ட தீர்மானங்களை பின்னர் நபி (ஸல்) அவர்கள் அறிந்து அவற்றை அங்கீகரிப்பர்; அல்லது மறுத்துவிடுவர். இவ்வாறு அவற்றுக்கு நபி (ஸல்) அவர்களிடம் இருந்து கிடைக்கின்ற பிரேரணையோ, நிராகரிப்போ எதுவானாலும் அது வஹியின் அடிப்படையிலானதாகும்.

எனவே, இஜ்திஹாதின் அடிப்படையில் அமைந்த அந்தத் தீர்மாணங்கள் வஹீயின் மூலம் அங்கீகரிக்கப்பட்டால், அதுவும் வஹியின் அடிப்படையில்

பெறப்பட்டதாகும். மாறாக அது நிராகரிக்கப்பட்டால், அவ்விடயத்தில் வஹீயின் தீர்மானமே சரீஅத்தாகும்.

நபி (ஸல்) அவர்கள் இஜ்திஹாதின் அடிப்படையில் சட்டங்கள் கூறினார்களா? இல்லையா? என்பது இஸலாமிய அறிஞர்களிடம் நீண்ட சர்ச்சைக்குரிய விடயமாயினும் "வஹீ" இடம்பெறாத சில விவகாரங்களில் இஜ்திஹாதின் அடிப்படையில் கூறிய சட்டங்களுக்கு, பின்னர் அல்லாஹ்விடமிருந்து அங்கீகாரம் கிடைக்கும்; சில நேரங்களில் இஜ்திஹாதின் அடிப்படையில் நபி (ஸல்) அவர்கள் எடுத்து தீர்மானத்தை அல்லாஹ் மாற்றியமைத்து அந்த முடிவைவிட இதுதான் பொருத்தமானது என்பதைத் தெளிவுபடுத்துவான்.

இதன்மூலம், இக்காலப்பகுதியில் இஸ்லாமிய சட்டக்கலை எந்தவகையான வெளித்தாக்கங்களுக்கும் உற்படவில்லை என்பது புலனாகின்றது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன அவை வருமாறு;

1. நபி (ஸல்) அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்
2. அவர் எந்த ஆசிரியரிடமும் கலவி கற்கவில்லை.
3. படிப்பறிவு அரிதாகக் காணப்பட்ட ஒரு சமூகத்தில் வாழ்ந்தவர்.
4. ரோமானிடயப் பேரரசுடனோ, பாரசீகப் பேரரசுடனே அந்தச் சமூகத்திற்கு எந்த உறவும் இருந்திடவில்லை.

ஆனால், அரேபிய சமூகத்தில் சில வழக்காறுகள் காணப்பட்டன. இவ்வாறு அச்சமூகத்தில் காணப்பட்ட சில வழக்காறுகளை இஸ்லாம் அங்கீகரித்த அதே நேரம், அவற்றில் சிலவற்றை நிராகரித்தும் உள்ளது. இவ்வாறு கீழ்வருவனவற்றை நிராகரிக்கப்பட்டவற்றுக்கு உதாரணமாகக் கூறலாம்.

1. பிள்ளைகளை எடுத்து வளர்த்தல்.
2. மணைவியைத் தனது தாய்க்கு ஒப்பிடுதல்.
3. அரபிகளிடம் காணப்பட்ட திருமண முறைகள்.
4. வட்டியின் அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்.

இவைதவிர இதற்கு இன்னும் பல உதாரணங்கள் உள்ளன

எனவே, இக்காலப்பகுதியில், இஸ்லாமிய சரீஅத் சட்டங்கள் முன்னைய மதங்களின் தாக்கங்களுக்குற்பட்டிருந்தது என யாரும் வாதிடமுடியாது. இஸ்லாத்தின் மிகப்பெரும் பகைவனாக, இருந்தாலும் கூட.

இக்காலப்பகுதியில் அல்குர்ஆனைத்தவிர வேறு எதுவும் பதிவு செய்யப்படவில்லை. அல்குர்ஆன் தவிர்ந்த - ரஸூல் (ஸல்) அவர்களுடைய நபிமொழிகள் கூட பதிவு செய்வது தடைசெய்யப்பட்டிருந்தது. முன்னைய சமூகங்களில் ஏற்பட்டது போன்று - அல்லாஹ்வுடைய வேதமாகிய அல்குர்ஆனுடன் ஹதீஸ்களும் கலந்து போய்விடும் என்று பயப்பட்டதே இவ்வாறு தடைசெய்யப்பட்டதற்குக் காரணமாகும். முன்னைய சமூகத்தவர்கள் தமக்கு அருளப்பட்ட இறை வேதத்துடன் சேர்த்து தமது மதப்போதகர்கள் மற்றும் துறவிகளுடைய வாக்குகளையும் பதிவு செய்தனர். இதனால், அவை ஒன்றோடொன்று கலந்து விட்டன. பின்னர் அவை அனைத்தையும் சேர்த்து ஒட்டு மொத்தமாக இறை வேதமாகக் கருதினர்.

ஒரு சில ஸஹாபாக்களுக்கு மாத்திரம் தமது பொன்மொழிகளை பதிவு செய்து வைப்பதற்கு நபி (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கியிருந்தார். இவர்களில் ஹஸ்ரத் அப்துல்லா பினஅ அம்ர் பின் அல் ஆஸ் (ரழி), ஹஸ்ரத் ஆலி (ரழி) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களில் அபதுல்லா பின் அம்ர் (ரழி) அவர்கள் நபிமொழிகளை பதிவு செய்து வைத்திருந்த ஏடு "அஸ்ஸஹீபதுஸ்ஸாதிகா" என ஆழைக்கப்படுகிறது.

அவ்வாறே நஷ்டஈடுகள், கொலைக் குற்றங்களுக்கான தண்டனைகள் போன்றவற்றுடன் தொடர்பான நபிமொழிகளைப் பதிவு செய்து வைப்பதற்கு ஹஸ்ரத் அலி (ரழி) அவர்களுக்கு அனுமதி வழங்கப் பட்டிருந்த்து. அவர் அவற்றைப் பதிவு செய்து வைத்திருந்தார்.

நபி (ஸல்) அவர்கள் 23 வருடங்கள் தமது தூதுத்துவப் பணியை மேற்கொண்டுவிட்டு வபாத்தானார்கள்; அதில் 13 வருடங்களை மக்காநகரிலேயே கழித்தார்கள். இக்காலப் பகுதியில் நம்பிக்கைக் கோட்பாடுகளுடன் தொடர்பான விவகாரங்களில் ஒரு உறுதியான நிலையை ஏற்படுத்துவதே அவர்களுடைய முக்கிய பணியாயிற்று. இந்த வகையில் மக்காவில் கீழ்வரும் அம்சங்கள் முக்கியத்துவம் பெற்றுவிளங்கின.

1. அல்லாஹ்வை நம்பிக்கை வைப்பதுடன் தொடர்பான விடயங்கள்.
2. தனது தூதுத்துவத்தின் உண்மைத்தன்மையைப் புரிடவைத்து ஏற்கச் செய்தல்.
3. மறுமை நாள் பற்றிய நம்விக்கையுடனஅ சொடர்பான விஷயங்களைப் போதித்தல்.

அவ்வாறே நற்பண்புகள் போதிக்கப்பட்டன; பெரும்பாவங்கள் தடைசெய்யப்பட்டன; சட்டக்கலை (ஷரீஅத்) சர்ந்த சில சட்டங்களும் போதிக்கப்பட்டன. இதற்கு அறுத்துப்பலியிடுதல் தொடர்பான சட்ட நடைமுறைகளை உதாரணமாகக் கூறமுடியும். அறுத்துப்பலியிடுதல் என்பது மனிதனுடைய அகீதாவுடன் நேரடியாகத் தொடர்புபடுவதே, இதுதொடர்பான விதிகள் மக்காவில் போதிக்கப்பட்டதற்குக் காரணமாகும்.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்த 10 வருடகாலத்தில் தான் அன்றாட நடைமுறைகள் தொடர்பான சரீஅத் சட்டங்கள் இறங்கி, நடைமுறைக்கு வரலாயிற்று. "ஷரீஅத்" எனும் வார்த்தை உள்ளடக்கி நிற்கின்ற முழுக்கருத்தையும் நபி (ஸல்) அவர்களுடைய மதீனா வாழ்க்கை வழங்கியது.

இவ்வாறு இஸலாமிய ஷரீஅத் கண்ட படிமுறை வளர்ச்சியை இஸ்லாமிய அழைப்பாளர்கள் அனைவரும் தியரியளவில் ஏற்றுக் கொள்கின்றனர். எனினும் கட்டம் கட்டமான ஷரீஅத்தின் வளர்ச்சிக்கான காரணிகள், அதன் பலன்கள் போன்றவற்றை ஆய்வு செய்து, அவற்றை நடைமுறைப் படுத்தத் தயாராக இல்லை.

(சரீஅத் சட்டங்கள் பூரணத்துவம் பெற்ற பின்னரே நபி (ஸல்) அவர்கள் வபாத்தானார்கள். அவர் வபாத்தாக முன்னர் பெரும்பாலான விவகாரங்களில் அவற்றை நடைமுறைப்படுத்தினார்கள்.) சரீஅத் சட்டங்கள் இஸ்லாமியக்

குடும்பவிடலுடன் தொடர்பான சட்டங்களாயினும் சரி! இஸ்லாமிய அரசுடன் தொடர்பான சட்டங்களாயினும் சரி! அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பான கொடுக்கல் - வாங்கல் போன்றவற்றுடன் தொடர்பான விதிகளாயினும் சரி!